பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 வைகாசி 30 றஜப் 28 இதழ் 123
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-6-80

## ஞாயிறு வாகனத் தடை நீங்கியது!

(கொழும்பு)

ஞாயிற்றுக்கிழமைகளில் தடை செய்யப்பட்டிருக்கும் வாகனப் போக்குவரத்துத் தடையை நீக்கிவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

பெற்றோல் விலை உயர்வைத் தொடர்ந்து பெருமளவு பெற்றோல் தேங்கி விட்டதை ஒட்டியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கு)

# மாணவர் வகுப்புக்குத் திரும்பினாலே விசாரணை!

## யாழ். மத்திய கல்லூரி விவகாரம்; கல்வி அமைச்சு அறிவிப்பு

### நிலைமையைச் சீராக்க பலரும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு முதலில் வகுப்புகளுக்குத் திரும்ப வேண்டுமென்றும் இதன் பின்னரே அவர்களுடைய கோரிக்கைகளையும் குற்றச்சாட்டுக்களையும் பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க முடியுமென்றும் யாழ். மத்திய கல்லூரி விவகாரம் தொடர்பாக வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகருக்கு கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

கல்வி அமைச்சிலிருந்து கிடைத்த இந்தப் பணிப்புரையைத் தொடர்ந்து மத்திய கல்லூரியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வடமாநில வித்தியாதிபதி நிலைமையைத் தெளிவுபடுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றுவந்த பகிஷ்கரிப்பு மற்றும் சம்பவங்களும் அதைத் தொடர்ந்து கல்லூரி இப்பொழுது காலவரையின்றி மூடப்பட்டிருப்பது குறித்தும் கல்விமான்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பெரிதும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

நிலைமையைச் சமாளித்து மீண்டும் சுமுக நிலைமையை ஏற்படுத்தி கல்லூரி திறந்து நடைபெறுவதற்கான முயற்சிகளில் ஆசிரிய சங்கங்களைச் சேர்ந்தவர்களும் பெற்றோர் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்களை முதலில் வகுப்புகளுக்குத் திரும்பச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. பகிஷ்கரிப்பிலீடுபட்ட மாணவர்கள் எவரும் பழிவாங்கப்படமாட்டார்களென்பதற்கான உறுதிபெற்றுத்தரப்படுமென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்வராதவரை அவர்களின் கோரிக்கைகள் பற்றி எந்தவித விசாரணையும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு முன்வராதென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

### 'கோவை' நீக்கம்

(கொழும்பு)

கட்டுப்பாட்டை மீறி, இயக்கத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த திரு கோவை மகேசன் கூட்டணியிலிருந்து நீக்கப்பட்டார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்தின் கொழும்பு வாசஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். கல்வித் திணைக்கள

## நிர்வாக அதிகாரி தாக்கப்பட்டார்!

### லிகிதர் தற்காலிக வேலைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரியும் நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளருமான திரு. எஸ். மகாலிங்கம் நேற்றுக் காலை கல்வியங்காடு சந்தையில் நடந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பலத்த காயத்துடன் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபரான யாழ். கல்விக் கந்தோர் லிகிதரான எம். கருணாநிதி பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

லிகிதர் எம். கருணாநிதி கல்வி அதிபதி திரு. மாணிக்கவாசகரினால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சுமார் 8 மணியளவில் நிர்வாக அதிகாரி

(8-ம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் முகமது இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு புதிய 25 பஸ்கள் கையளிக்கப்படும் விழா இன்று காலை யாழ். பஸ் நிலையத்தில் நடைபெறுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையம்

காவலாளிகள் பதவிக்கான

**வெற்றிடங்கள்**

மேற்படி பதவிக்கு
திருநெல்வேலி, கல்வியங்காடு
ஆகிய பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும்
18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டோர்
உடன் விண்ணப்பிக்கவும்.
நேர்முகப்பரீட்சை 15-6-80 அன்று
காலை 9-00 மணிக்கு
நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது
கீழ்க்கண்ட சாதனங்களை கொண்டுவரவும்.

1. பிறப்பு சாட்சிப் பத்திரம்
2. வதிவிடச் சான்றிதழ்
3. நற்சாட்சிப் பத்திரங்கள்

தலைவர்,
நல்லூர் தொகுதி
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
62, வைமன் வீதி நல்லூர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## கொள்ளைக்கு திட்டமிட்டவர் பொலிசில் சிக்கினர்?

### துணுக்காய் ப. நோ. கூ. கொள்ளைக்கும் இவருக்கும் தொடர்பு இருக்கலாம்?

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற 48 ஆயிரம் ரூபாய் ஆசிரிய சம்பளப் பணக் கொள்ளை தொடர்பாகத் தேடப்பட்டுவந்த மேலும் ஒரு சந்தேக நபரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்திருக்கிறார்கள்.

ஏற்கனவே நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைதாகியிருப்பது தெரிந்ததே.

ஞானப்பிரகாசம் ஜெயச்சந்திரன் அல்லது ஜெயா மாஸ்டர் என்று வழங்கப்படும் இந்தநபரே மேற்படிக் கொள்ளையைத் திட்டமிட்ட மூலகர்த்தா என்று பொலிசார் நம்புகின்றனர்.

துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் இடம்பெற்ற 21 ஆயிரம் [illegible] கொள்ளையிலும் இந்தநபர் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பொலிசார் நம்புகின்றனர். இந்தக் கொள்ளை தொடர்பாக மேலும் சில நபர்கள் பற்றிய தகவலும் பொலிசாருக்கு கிடைத்திருக்கிறதாம்.

சாவகச்சேரி [illegible] ஆசிரிய[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோப்பாய் தெற்கில் 6½ பரப்புடன் கூடியகல்வீடு சகலவசதியுடன் விற்பனைக்கு உண்டு கடித மூலம் தொடர்பு கொள்: விளம்பர இல: 5957, C/o. ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5957

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங் (I E E முறைப்படி) Transistor றேடியோ, P M G Certificate, Building Construction, Draughtsmanship Pipe & Bar Bending முதலிய பல தொழிற் பயிற்சிகளை நவீன வெளிநாட்டு முறையில் அளிப்பவர்கள் நஷனல் இன்ஸ்ரிரியூட்ஸ் 57, 59, பாமிரோல் வீதி, யாழ்ப்பாணம். 5981

### தேவை

இரவு காவல்காரர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேரில் மனுச்செய்க. அரசாங்க காவல் துறையிலிருந்து இளைப்பாறியவர்கள் விரும்பத்தக்கது அரஸ்கோ இன்டஸ்றீஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 5991


### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற மங்கும்பான், மங்கும்பான் மேற்கில் வசித்த செல்லையா வீரசிங்கம் என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

சின்னத்தம்பி செல்லையா மங்கும்பான் மேற்கு, மங்கும்பான்.

— மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்க இல: 3523

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு, இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன், பதிவாளர்

1980-ஆம் ஆண்டு பங்குனி மாதம் 18-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தவர்:

ப. கதிரவேலு,

ஒப்பம்

மனுதாரரின் சட்டத்தரணி

5985

### சங்காபிஷேக விழா

(மாவிட்டபுரம்)

பிரசித்தி வாய்ந்த மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் மண்டல பூர்த்திதின சங்காபி[illegible] மாதம் 14-ந் [illegible] உள்ளது. [illegible]

## 'சுவடிகளை சேகரிக்கவும் பிரதியாக்கவும்! நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்களிடம் சுவடிகளை எதிர்காலச் சந்ததிக்காக பேணிக்காப்பதில் உள்ள ஆர்வம் தமிழ் மக்களிடம் அரிதாகவே காணப்படுகின்றது. சிங்கள மன்னர்கள் காலந்தொட்டே ஆலயங்களில் பௌத்த குருமார் ஏட்டுச் சுவடிகளை பேணி வந்தார்கள் அவ்வாறு பேணப்பட்ட சுவடிகளை ஆதாரமாகக்கொண்டே தீபவம்சன், சூள்வம்சம் மகாவம்சம் போன்ற நூல்களைப் பிற்காலத்தில் எழுதினார்கள். தமிழர்களோ சுவடிகளை அடுப்பிலிட்டும், தீயிலிட்டும் இழந்து வந்திருக்கிறார்கள்.

சர்வதேச சுவடிகள் வாரத்தையொட்டி மட்டக்களப்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் ஒழுங்குசெய்த சுவடிகள் கண்காட்சியை பற்றிய சிறப்புச் சொற்பொழிவினை ஆற்றிய உதவிச் சுவடிக் காப்பாளர் திரு. க. நவசோதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.!

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு டிக்ஸன்நிலவீர தமது தலைமையுரையின்போது தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் ஆரவாரமின்றி அமைதியாகக் கலாச்சார செல்வங்களை பேணிப்பணியாற்றி வருகின்றதென்று குறிப்பிட்டார்.

திரு. நவசோதி மேலும் பேசுகையில்;

"பத்திரிகைகள், வெளியீடுகள் மட்டுமல்லாமல் டச்சுக் காலம் முதல் அரச நிர்வாகத்திற்குப் பயன்படுத்திய சாதனங்களையும், நாட்டின் கலை, கலாச்சார பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் சாதனங்களையும் பேணிக்காக்கும் பெரும்பணியையும் சுவடிக்கூடம் ஆற்றிவருகின்றது மக்களிடம் காணப்படும் பெறுமதிமிக்க சுவடிகளை சுவடிக் கூடம் பணந்திருந்து வாங்கவும் படி எடுத்துப் பாதுகாக்கவும் முன்வந்துள்ளது"

வித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராசா நன்றி கூறினார்.

## இலங்கைவானொலி கர்நாடக இசைக்கலைஞர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

கர்நாடக இசைக் கலையின் மகத்துவம்பற்றி கிராமிய மக்களுக்கு ஆய்வரங்கு நடாத்தி கர்நாடக இசையினை வளர்க்கவும், முதுபெரும் கர்நாடக இசைமேதைகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதற்காகவும், யாழ்ப்பாணத்தில் வானொலி நிலையம் நிறுவுவதற்கான முயற்சிகளை துரிதப்படுத்துவதற்காகவுமாக "இலங்கை வானொலி கர்நாடக இசைக் கலைஞர் ஒன்றியம்" கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

இவ்வொன்றியம் மாதாமாதம் கூடி தனது நடவடிக்கைகளை தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் விஸ்தரிக்கும். காலத்துக்குக்காலம் இலங்கை வானொலியின் கர்நாடக இசைக்கலைஞர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளைக் களைவதற்கு, உயர்மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை நடாத்தவும் இவ்வொன்றியம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு! தலைவர்: திரு ராம் குமாரசாமி, உபதலைவர்கள்; ஏ எஸ். இராமநாதன், ஏ கணேசசர்மா, பீ எஸ் ஆறுமுகம்பிள்ளை, செயலாளர்: திரு ஏ கே கருணாகரன், உதவிச் செயலாளர்: செல்வி தனதேவி சுப்பையா, பொருளாளர்: திரு வி கே குமாரசாமி, நிர்வாகசபை உறுப்பினர்கள்; திருமதி ஜெயலக்ஷ்மி நடராசமூர்த்தி, செல்வி பாக்கியலெட்சுமி நடராசா, செல்வன் ஏ திலகேஸ்வரன், எல் திலகநாயகம் போல், பொன். சுந்தரலிங்கம், வி ரி வி சுப்பிரமணியம், எஸ் மகேந்திரன், ஏ கணேசலிங்கம், வெளிமாவட்டப் பிரதிநிதிகள்: கொழும்பு திரு வி பழநிநாதன், மட்டக்களப்பு: திரு என் ராஜூ, திருகோணமலை: திரு ஜூ வடிவேல்.

போஷகர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள், என். சண்முகரத்தினம், பரந்திக்கிராஜா. (கெ)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை காலஞ்சென்ற மங்கையர்க்கரசி கனகரத்தினத்தின் ஆதனங்கள் விடயமாக

— மரணித்தவர்

தத்துவ நியாயாதிக்கம் இல: 3462

பாலசிங்கம் இளவ் ஜெகசிங்கம், சண்டிக்குளி.

அருந்ததி இராசலிங்கத்தின் தத்துவக்காரனாக — மனுதாரர்

மேற்குறிப்பிட்ட இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள எவரேனும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி காலை 10 மணிக்கு முன் இந் நீதிமன்றத்தில் தோன்றி பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படாதென்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்

பொ. பாக்கியநாதன், பதிவாளர்

1980 மாசிமாதம் 22-ந் திகதி

காரணம் காட்டும் காலம் 29-8-80க்கு நீடிக்கப்பட்டது.

கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன் பதிவாளர்

16-5-80

5992

திருவிழா இடம்பெற்ற பின் இச்சங்காபிஷேக விழா வரும் 14-ந் திகதி இடம்பெற உள்ளது. அன்றையதினம் மூலஸ்தான மூர்த்திக்கும், கடம்ப விருட்சமூர்த்திக்கும் தனித்தனியே 1008 சங்காபிஷேகமும். மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் இடம்பெறும். (ஈ)

### பரிசளிப்பு விழா

(மாவிட்டபுரம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும், சின்னப்பு தம்பதிகளின் புலமைப்பரிசில் வழங்கல், புதிய கட்டிடம் திறத்தல் ஆகிய வைபவங்களும் இன்று நடைபெறுகின்றன. அதிபர் திரு. ஏ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. நா. மாணிக்க இடைக்காடர், திரு. செ. பயில்வாகனம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வார் [illegible] (ஈ)

# மட்டக்களப்பு செய்திகள்

### தொலைபேசி பரிவர்த்தனை விஸ்தரிப்பு

(மட்டக்களப்பு)

புயலின் பின்னர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் தொலைபேசி பரிவர்த்தனை விஸ்தரிப்பு நிலையங்கள் ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது

இதற்கிணங்க அக்கரைப்பற்று தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் சகல வசதியுடன் கடுகதி வேகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது

### விற்பனைநிலையம்

பட்டிருப்புத் தொகுதியில் களுவாஞ்சிக்குடி என்னும் இடத்தில் விற்பனைஅபிவிருத்தித் திணைக்கள நிலையம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யு. தேவநாயகத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது இந்த நிலையத்தின் வியாபாரத்தை மட்டு நகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை ஆரம்பித்து வைப்பார்.

### பொத்துவிலில் பீட் ரூட் செய்கை

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொகுதியில் பரந்த அளவில் பீட்ரூட் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த வருடம் பரீட்சார்த்தமாக செய்யப்பட்ட சாகுபடி வெற்றி அளித்ததைத் தொடர்ந்து 350 ஏக்கரில் இச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

### பனை விதை விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பனை விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக பட்டிருப்பு தொகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி சேவையாளர் பிரிவுதோறும் கிராமசேவையாளர்கள் மூலம் பனை விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது.

### தபால்நிலைய திறப்பு விழா

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு.செல்லையா இராசதுரையின் நீண்டகால கோரிக்கையின் பேரில் கடந்த அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய தபால் நிலையம் எதிர்வரும் 28ம் திகதி அமைச்சர் இராசதுரையினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத் தபால் நிலையத்துடன் அஞ்சல் அதிபர் விடுதியும் அமைந்துள்ளது இந் நிலையம் தற்போதைய தபால்நிலையத்தில் இருந்து நூறுயார் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது புதிய தபால்நிலையம் திறக்கப்பட்டதும் தற்போதைய தபால் நிலையம் தபால் தரம் பிரிக்கும் நிலையமாக இயங்கும் என்று அறியப்படுகிறது.

### நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம்

மட்டக்களப்புத் தொகுதியில் கடற்றொழில் அமைச்சின் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ், உன்னிச்சைக்குளத்திலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

### மத்திய தபால் தரம்பிரிக்கும் நிலையம்

தற்போது தபால் தந்தி அமைச்சினால் நாடெங்கும் அமைக்கப்பட்டுவரும் மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையம் ஒன்று மட்டக்களப்பிலும் நிறுவப்படவுள்ளது. இந்த நிலையம் தற்போதைய தபால் நிலையம் புதிய தபால் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதும், தற்போதைய தபால் நிலைக் கட்டிடத்தில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சபாநாயகர் நாளை விஜயம்

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையின் அழைப்பை ஏற்று சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார் நாளை மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார். அன்றைய தினம் சபாநாயகர் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் அமைந்துள்ள மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையின் இருமாடிக் கட்டிடம் காத்தான்குடி ஆறும் குறிச்சி அமினா தமிழ் முஸ்லிம் பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடம் ஆகியவற்றைத் திறந்து வைப்பதோடு, புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

### நாட்டார்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மூக நாடுகளில் உள்ள நூலகங்களின் இத்தகைய கட்புல-செவிப்புல தகவற் பகுதி சிறப்பாக இயங்குவதில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளே இவற்றில் முன்னணியில் திகழ்கின்றன. இருப்பினும், எமக்கு முடிந்த அளவில் இத்தகைய தகவல் மூலங்களைப் பெற்று பேணுவது அவசியம் இதில் வளர்முக நாடுகளுக்கு கூடிய அளவு பொருத்தம் கூடியது ஒலிப்பதிவு நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து கொள்ளுதலும், சிலைட், படச்சுருள் போன்றவற்றில் படங்களைச் சேகரித்து வைத்தலுமேயாகும். இதுவே வீடியோ ரேப் பதிவு முறையிலும் இசையும் நிழற்பட பதிவுமுறையிலும் பார்க்க மிகவும் சிக்கனமான முறையாகும்.

இலங்கையிலும் நாட்டார் பண்பாட்டியலில் ஆர்வம் கொண்டவர் தனிப்பட்ட முறையிலும், கூட்டு நடவடிக்கையிலும் ஈடுபட்டு நாட்டுக் கூத்து நாட்டார்பாடல் போன்றவற்றை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து பேணிவந்துள்ளனர். தமிழர் நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்து என்பவற்றில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி அ. சண்முகதாஸ் போன்றோரும் சிங்களப்பகுதியில் பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திர, கலாநிதி நந்தசன ரத்னபால, கலாநிதி எம் எச். குணபால, திரு. தேவசூரியசேன போன்றோரும் ஈடுபட்டு வந்துள்ளனர். இதைவிட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தனது கிராமிய நிகழ்ச்சித் தொகுப்புக்களின் ஊடாக இத்தகைய ஒலிப்பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஒலிப்பதிவு நாடாக்களை பேணி வருகின்றது. எனவே தனிப்பட்ட முறையில் நடைபெற்றவையும் இந் நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு தேசிய ரீதியில் பயன்பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

### விசாரணை...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

வரத்தினம் ஆகியோர் வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் வி. தம்பிரத்தினமும் எஸ். லோகேஸ்வரன் ஆகியோரும் ஆஜராகினர்கள்.(ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நெருப்புக்குக் குளிர்மை கிடையாது. அது போன்று அழியக்கூடிய இவ்வுடலுக்கு நிரந்தரத் தன்மையும் மூப்பிலிருந்து விடுதலையும் கிடையா.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

# யாழ். மத்திய கல்லூரி விவகாரம்

யாழ். மத்திய கல்லூரி விவகாரம் பற்றி கல்வியில் அக்கறையுள்ள அனைவரும் அதாவது அதிபர், ஆசிரியர், பெற்றோர், [illegible], [illegible], பழைய மாணவர் யாவரும் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியம். உண்மை நிலை என்ன? மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிப்பது அவர்கள் கூறும் காரணங்களுக்காகவா அல்லது திரை மறைவில் நடைபெற்ற சூழ்ச்சி நாடகங்களினாலா? பாங்கொக் செல்லவிருந்த மாணவன் பற்றிய உண்மைச் சம்பவங்கள் யாவை? இவை பற்றி நடுநிலை நின்று அலசி ஆராய்வது அவசியமாகின்றது.

எமது வடமாநிலம் கல்வியில் மேம்பட்டு நிற்பது ஆசிரியப் பெருந்தகைகளின் அயராத முயற்சியும் மாணவமணிகளின் விடாமுயற்சியும் என்பதை யாவரும் அறிவர். யாழ்ப்பாணத்தில் கல்வி கற்பித்த மாணவரின் தொழில் [illegible] குறைப்படுகிறது. இவ்வாறான நற்குறளின் வாழ்வு பழகியவர் நாம். "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பதும் மறப்பதற்கில்லை. குருகுலக் கல்விக்கு வித்திட்ட பரம்பரையினர் நாம். எனவே இவ்வாறான சில ஒழுக்கசீலர்களால் கட்டியெழுப்பப்பட்ட கல்விக் கூடங்கள் சிதைக்கப்படுவதும் சின்னாபின்னப்படுத்தப்படுவதும் கண்டிக்கப்பட வேண்டியதே.

சுயநலத்திற்காக மாணவர்களைப் பகடைக்காய்களாக்கி அவரது கல்வியைப் பாழடிக்க முயலும் எவரும் உண்மையான ஆசிரியராக இருக்க முடியாது. புனிதமான இத்தொழிலுக்குக் களங்கமேற்படுத்த முயல்பவர்கள் களைந்தெறியப்பட வேண்டியவரே. மேலதிக ஆசிரியர்களைத் தேவையான இடங்களுக்கு மாற்றுவதற்காகத் திணைக்களம் அவ்வப்போது அதிபர்களிடமிருந்து தகவல் சேகரித்து அதன்படி அவர்களை இடமாற்றஞ் செய்து வருவது யாவருமறிந்ததே. ஒரு கல்லூரியில் ஒரு ஆசிரியர் பல வருடம் சேவை செய்தவர் என்பதற்காக அவர் இளைப்பாறும் வரை மாற்றப்படக்கூடாது என்பது விதண்டாவாதம். இது நிர்வாகத்தைப் பொறுத்த விடயம். இதில் தலையிடும் உரிமை பெற்றோருக்கோ அன்றி மாணவருக்கோ கிடையாது. இது பற்றிப் "பெற்றோர் [illegible]" பத்திரிகை எடுத்துக் கூறியுள்ளது.

பொன் கொடுத்தாலும் இழந்த நேரத்தைப் பெறமுடியாது. மாணவர் தம் பொன்னான நேரத்தைக் கல்வியில் செலுத்துவதை விடுத்து வேறு விடயங்களில் ஈடுபட்டு, எடுப்பார் கைப்பிள்ளை ஆகிவிடக் கூடாது. பகிஷ்கரிப்பு ஒரு தொற்றுநோய். ஆரம்பத்தில் இதற்கு தக்க வைத்தியம் செய்தல் வேண்டும்.

பாங்கொக் செல்லவிருந்த மாணவரை அதிபர் தடுத்து நிறுத்திவிட்டார் என்று பத்திரிகையில் அறிக்கை வெளியாயிற்று! உண்மை நிலை எது என மாணவ தலைவர்களோ பழைய மாணவரோ அறிய முயற்சிக்காதது கவலைக்குரியதே. மாணவனைத் தடுக்கும் நோக்கம் அதிபருக்கு இருந்திருந்தால் அவரை வேறிருவருடன் தெரிவுப் பயிற்சியில் பங்குபற்றுவதற்குக் கல்லூரிப் பணத்துடன் அனுப்பி வைப்பாரா? மேலும் அம்மாணவர் பாங்கொக் செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 21 பேரில் ஒருவராக உள்ளார் என்பது மட்டுமே முதலில் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்பு 26-5-80 ல் அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் எழுதிய கடிதம் அதிபருக்கு 6-6-80 அன்றுதான் கிடைத்தது.

அக்கடித விபரம் வருமாறு:

ஸ்ரீலங்கா பாடசாலைகள்
உதைபந்தாட்டச் சங்கம்
போல் பிரகலாதன்
26-5-80

அதிபர்
யாழ் / மத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்

ஐயா,

உத்தேசிக்கப்பட்ட பாங்கொக் செல்லும் குழுவில் போல் பிரகலாதன் தயார் நிலை ஆளாக (ஸ்டான்பை) (Stand by) ஆக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் 26 மே முதல் ஜுன் 3 வரை நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் பங்குகொள்ள வேண்டும். குழு விளையாட்டு வீரர்களில் யாருக்காவது காயங்களேற்பட்டால் மட்டுமே இவர் பாங்கொக் செல்வார். இவரே முதலாவது தயார் நிலையாளாக (ஸ்ரான்ட்பை) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்பயணம் இன்னும் ஐமிச்சமாகவே உளது. ஜுன் 3-ம் திகதியே நாம் இப்பயணம் செய்வதா இல்லையா எனத் தீர்மானிக்கப்படும்.

நன்றி
இப்படிக்கு
செயலாளர்

ஒரு பாடசாலையை அதுவும் ஏறக்குறைய இரண்டாயிரம் மாணவர் கல்வி கற்கும் பாடசாலையை நிர்வகிப்பது சுலபமான காரியமல்ல. ஒரு தனியார் பாடசாலை அதிபருக்குள்ள உரிமைகளில் அரைப் பங்குகூட இல்லாத அரசாங்கப் பாடசாலை அதிபரின் நிலைமை கவலைக்குரியதே. இதுபற்றி எமது சங்கம் மேலிடத்துக்கு எடுத்துக் கூறியும் நிலைமை மாறவில்லை. ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கும் ஒருவருக்கு அங்கு வேலைசெய்பவர்களை நியமிக்கவோ தண்டிக்கவோ உரிமையில்லை. நிர்வகிப்பது ஒருவர், நியமிப்பது, மாற்றுவது, தண்டிப்பது இன்னொருவர். இந்நிலையில் நிறுவனம் திறமையாக இயங்குமா? நன்கு சிந்திக்க வேண்டும். நிர்வாகம்பற்றிப் பல கலந்துரையாடல்கள், பயிற்சி வகுப்புகள், பாசறைகள் வைப்பதில் பயனில்லை. அடிப்படை அமைப்புகள் மாற வேண்டும். அதிபருக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகள் கிடைக்கும்வரை மாணவர் பகிஷ்கரிப்பு, [illegible] ஆசிரியர் [illegible] பாடசாலை [illegible] தானிருக்கும் கல்வியோடு சம்பந்தப்பட்ட அத்தனைபேரும் இப்பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதை விடுத்துப் பூசி மெழுக முன்வருவது புத்திசாலித்தனமாகாது.

பாடசாலைகளை அரசியல் மேடைகளாக்காமல் பாதுகாத்துக் கொள்வது கல்வியோடு சம்பந்தப்பட்ட அத்தனை பேருடைய கடமையாகும். அரசியலும் கல்வியும் இருவேறு துறைகள். இரண்டையும் ஒன்றாகக் கலப்பதால் கல்வி பாழாகும் என்பது கல்வியியலாளரின் கூற்று.

அல்லும் பகலும் பாடசாலைக்காக உழைத்த உத்தமர்கள் பலரை நாடறியும். பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களை அவதூறாகப் பேசுவதும் துண்டுப்பிரசுரங்கள் அடித்து விடுவதும் அநாகரிகச் செயல்கள்.

இன்று நாம் ஒருவரைத் தூற்றலாம். ஆனால் அவர் செய்த நற்காரியங்களை நினைத்துப் பார்க்காமல் விடுவது நன்றிமறந்த செயல். குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென எமது சங்கம் கல்வியமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுகின்றது. இதனை ஒரு சிறு விடயமாகக் கருதித் தட்டிக் கழிக்கும் எச்செயலையும் சங்கம் வன்மையாகக் கண்டிக்கும். தூண்டிவிட்டுக் கூத்துப் பார்க்கும் கும்பலை உரியவர்கள் இனங்கண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பிரச்சனைகள் உடனுக்குடன் களையப்பட வேண்டும். பூசி மெழுகப்பட்டால் அவை பூதாகாரமாக உருவெடுத்துப் பூசி மெழுகியவர்களையே பூண்டோடு அழித்து விடுகின்றது.

[illegible]
வடமாகாண அதிபர்கள் சங்கம்

# நாட்டார் பண்பாட்டியல் தகவல் மூலங்களும் அவற்றைப் பேணுதலில் நூலகங்களின் பங்கும்

13, 14 ஜுன் 1980-ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நாட்டார் பண்பாட்டியற் கருத்தரங்கையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

பலரின் கவனத்தை ஈர்க்கும் ஒரு வளர்ச்சியடைந்த துறையாக தற்போது நாட்டார் பண்பாட்டியல் விளங்குவது அத்துறையின் முக்கியத்துவத்தினையும் ஆழத்தினையுமே உணரவைக்கிறது. மக்களிடையே தொன்று தொட்டு நிலவி வரும் பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கதைகள், பாடல்கள், ஆடல்கள் என்பனவற்றைப் பற்றியதாக அமைவதே இந்நாட்டார் பண்பாட்டியலாகும். ஒரு நாட்டின் சமூக, கலாச்சார வரலாற்றோடு மிகவும் நெருங்கிய தொடர்புடைய இந்நாட்டார் பண்பாடுகள், வேகமாக ஏற்பட்டு வரும் சமூக மாறுதல்களினால் சிதைவுறுவதோடு மட்டுமன்றி அழிந்து போகும் நிலையையும் எதிர்கொண்டு நிற்கின்றன. இதனாற்றான்போலும் நாட்டார் பண்பாட்டியற் கல்வி (Folklore Studies) இன்று உலக நாடுகள் அனைத்திலும் முக்கியத்துவத்தைப் பெற்று விளங்குகிறது.

இத்தகைய தேசிய முக்கியத்துவத்தை உடைய நாட்டார் பண்பாடு பற்றிய தகவல்கள் முறையாகப் பேணிப்பாதுகாக்கப்படவேண்டியது மிக அவசியமானதாகும்.

## இ. கிருஷ்ணகுமார்

(நூலகம்:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நாட்டார் பண்பாட்டியற்றகவல் மூலங்களை எழுதப்பட்ட மூலங்கள், எழுதப்படாத மூலங்கள் என இருவகையாக வகுக்கலாம். மனிதனுக்கு எழுதும் வாசிக்கும் அறிவும் ஆற்றலும் ஏற்பட்ட பின்பு உருவாகிற தகவல் மூலங்களே எழுதப்பட்ட மூலங்களாகும். இலங்கையில் இவை ஆரம்பத்தில் கல்வெட்டுக்களாகவும், பின் காலத்தின் வளர்ச்சிக்கொப்ப ஏட்டுப்பிரதிகளாகவும், அச்சிட்ட நூற்பிரதிகளாகவும் அமைகின்றன. ஆனால் நாட்டார் பண்பாட்டின் உண்மையான தகவல் மூலங்கள் இவையல்ல. வாய்மொழி மரபே (Oral Tradition) இங்கு பிரதான இடத்தை வகிக்கிறது. இதனைச் சார்ந்தே வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள் என்பன மக்கள் மத்தியில் பரவின. நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து, பில்லி சூனிய நம்பிக்கை, சிறு தெய்வ வழிபாடு போன்றவைகள் இலங்கைக் கிராமங்களில் இன்னும் கூட வாய்மொழிமரபாக சந்ததி சந்ததியாக பேணப்பட்டு வருவதைக் காணலாம். இதனையே எழுதப்படாத தகவல் மூலம் எனக் குறிப்பிடுகின்றோம்.

இந்த இருவகையான தகவல் மூலங்களிலும் எழுதப்பட்ட தகவல் மூலங்களைப் பெறுவதிலும், பேணுவதிலும் பிரச்சினைகள் அதிகம் உருவாவதில்லை. சாதாரணமாக இலங்கையில் நூல்களைப் பேணுவது போன்றே இத்தகைய ஏட்டுப் பிரதிகளையும், அச்சிட்ட நூல்களையும் பேணமுடியும். ஆனால் எழுதப்படாத மூலங்களையிட்டே பல பிரச்சினைகள் எழுகின்றன. நாட்டார் பண்பாட்டில் சிறப்பம்சமாக விளங்குவது அவர்களால் பேணப்பட்டு வரும் இசை, ஓசைச் சிறப்பு, அபிநயம் என்பனவாம். இலங்கையின் கிராமங்களில் இன்றுவரை தொடர்ச்சியாக பேணப்பட்டு வரும் நாட்டார் பாடல்களிலும், வழிபாடுகளிலும் இவற்றைத் தெளிவாகக் காணலாம். எனவே நாட்டார் பண்பாடு பற்றிய முழுமையான தகவலைப் பெறுவதற்கு அது தொடர்பான இசைச் சிறப்பையும், காட்சி அமைப்பையும் அறிதல் வேண்டும். இதன் காரணமாக நாட்டார் பண்பாட்டியலின் தகவல் மூலங்கள் ஏனைய சாதாரண தகவல் மூலங்களைப் போலன்றி சில விசேட தன்மைகளை வேண்டி நிற்கின்றன.

நவீன நூலகங்களில் இத்தகைய எழுதாத்தகவல்கள் ஒலிப்பதிவுநாடாக்கள் (Tapes) இசைத்தட்டுகள் (Records), படச்சுருள்கள் (Roll film) படவில்லைகள் (Slides) வீடியோ பதிவு நாடாக்கள் (Video Tapes) போன்ற நூலுருவில்லாத சாதனங்களில் பேணப்பட்டு வருகின்றன. இதற்கென விசேடமான கட்புல - செவிப்புல தகவல் பகுதி ஒன்று இங்கு அமைக்கப்படுகிறது. இலங்கையிலும் கூட தேசிய அரும்பொருட்சாலை நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள் போன்ற இடங்களில் இத்தகைய அமைப்புகள் ஓரளவு இருந்தாலும் இங்கெல்லாம் நாட்டார் பண்பாட்டியற்றகவல் மூலங்கள் சேர்க்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றனவா என்பது கேள்விக்குரியதே.

இலங்கைபோன்ற வளர்முக நாடுகளில் இத்தகைய கட்புல, செவிப்புல தகவல் சாதனங்களைப் பெறுவதிலும், பேணுவதிலும், தகவல் வழங்குவதிலும், பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றோம். முதலாவதாக விலையுயர்ந்த நவீன தொழில்நுட்ப உபகரணங்களான இவைகளைப் பெறவும், பேணவும் அதிகநிதி தேவைப்படுகிறது. அடுத்து இத்தகைய தகவல்களைப் பெறுதலே தேர்ச்சிபெற்ற ஆர்வமுள்ள மனிதவலு குறைவாகக் காணப்படுகிறது. உதாரணமாக வீடியோ ரேப்பிலோ அல்லது ஒலிப்பதிவு நாடாவிலோ தகவல்களைப் பதிவு செய்வதாயின் சம்பவம் நிகழும் இடங்களுக்கு நேரடியாக சென்றுவரல் வேண்டும். அத்துடன் கிராம மக்களிடமிருந்து வரும் சம்பிரதாயக் கட்டுப்பாடு [illegible] இத்தகைய தகவல்களைப் பதிவு செய்வது என்பதுகூட இலகுவான காரியமாக அமைவதில்லை. இதைவிட வீடியோ ரேப், பிலிம்ஸ் போன்றவற்றில் பதிவு செய்த தகவல்களை ஆய்வுகூடங்களில் கழுவிப் பேணிய பின்பே பாவிக்கும் நிலைக்குக் கொண்டுவரலாம். எனவே இதற்கென ஆய்வுகூட வசதிகள்கூட தேவையாக அமைகின்றன. இதனால் வளர்

(2-ம் பக்கம் பார்க்க)

# இருதினங்கள் நடைபெறும் கருத்தரங்கு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கணபதிப்பிள்ளை நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் "இலங்கையில் தமிழ்நாட்டார் வழக்கியல்" என்னும் கருத்தரங்கு வரும் வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும். அன்றைய தினம் "பேராசிரியர் கணபதிப்பிள்ளையும், இலங்கையில் தமிழ்நாட்டார் வழக்கியல் ஆய்வும்" என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடக்கவுரை ஆற்றுவார். 'இலங்கையில் தமிழ் நாட்டார் வழக்கியல் ஆய்வுகள் வந்தமையும் வரவேண்டியவையும்' என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வாதாரவுரை நிகழ்த்துவார். "சமூக பொருளாதார நோக்கில் நாட்டார் வழக்குகள்" என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறைத் தலைவர் திரு. நா. பாலகிருஷ்ணன் உரையாற்றுவார். "நாட்டார் வழக்கும், மாறும் சமுதாய அமைப்பில் அவற்றின் நிலையும்" என்னும் பொருள் பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி உரையாற்றுவார். "இலங்கைத் தமிழர் வரலாறும், நாட்டாரியலும்" என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா உரையாற்றுவார். 'தமிழகத்தில் நாட்டாரியல் ஆய்வுகள்' என்னும் பொருள் பற்றிச் சென்னை அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணைப் பேராசிரியர் ஏ. என் பெருமாள் உரையாற்றுவார். கருத்துப் பரிவர்த்தனையும் இக்கருத்தரங்கில் இடம்பெறும்.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

திருமதி க. சின்னையா தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில், "வன்னிப்பிரதேச நாட்டார் வழக்குகள் தொடர்பான பயன்பாட்டுநிலை" என்னும் பொருள் பற்றித் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளர் திரு. ந. சுப்பிரமணியம் உரைநிகழ்த்துவார். "கிழக்கிலங்கை முஸ்லீம்களின் வாழ்க்கையமைப்பும், அவர்தம் நாட்டார் வழக்குகளும்" என்னும் பொருள் பற்றித் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளர் ஜனாப் எம். ஏ. எம். நுஃமான் உரையாற்றுவார். "பெண்களும் யாழ்ப்பாணத்து நாட்டாரியல் ஆய்வுகளும்" என்னும் பொருள் பற்றித் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளர் திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம் உரையாற்றுவார். 'யாழ்ப்பாணத்துப் பெண்களின் பாரம்பரிய நம்பிக்கைகள் சிலவற்றின் சமூக அடிப்படை' என்னும்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துநாள் கருத்தரங்கு

# செய்தித்துறையில் புதிய அலைகள்

சே. ஜி. மகாதேவா

[4]

டெவலப்மென்ட் ஜேர்னலிசம்" என்பதன் அர்த்தம் அபிவிருத்திக்கு செய்தித் துறையைப் பயன்படுத்துவது அதாவது நாட்டின் கிராமத்தின் அபிவிருத்திக்கு செய்தித்துறை என்பதாகும். மக்கள் தொடர்பு சாதனங்களாக விளங்கும் பத்திரிகை வானொலி தொலைக்காட்சி வீடியோ தொலைக்காட்சி போன்றவற்றின் மூலமாக மக்களுடன் குறிப்பாக ஒரு நாட்டின் அடிநாதமாக விளங்கும் கிராமிய மக்களுடன் தொடர்பு கொண்டு அபிவிருத்திப் பணியில் ஈடுபடுவதே இதன் அர்த்தமாகும். ஆனால் கருத்தரங்கில் இது சம்பந்தமான விரிவுரைகள் விளக்கங்கள் இடம்பெற்றதும், சிலருக்கு தாங்கள் ஏற்கனவே இத்துறை பணியில் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டு வருவது உடன் புரிந்துகொண்டது! அந்த வகையில் இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தை சேர்ந்த திருமதி யோகா பாலச்சந்திரனை குறிப்பாகச் சொல்லலாம்.

## பல வருடங்கள் முன்னாக

"இலங்கையில் இன்று குடும்பத் திட்டம், ஓரளவு பிரபல்யம் பெற்றுவிட்டாலும் அதன் ஆரம்ப காலம் மிகவும் சோதனை மிகுந்தது! இத்திட்டத்தைநாம் அறிமுகப்படுத்துவதற்கு சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தோம் என்றால் மிகவும் பொருந்தும்! குடும்பத்திட்டத் எனது மனைவியிடம் கூறுகின்றேன்" என்றார் ஒரு கணவர். அதே மாதிரியே எல்லாக் கணவன்மாரும் கூறினார்கள்

"சில விஷயங்களை உங்களிடம் சொல்லமுடியாது. அவற்றையெல்லாம் உங்கள் மனைவிமாரிடம்தான் கூறவேண்டும் நாங்களும் பெண்கள்தானே..." என்று வற்புறுத்திப் பார்த்தோம். அவர்கள் இலேசில் அசைவதாகத் தெரியவில்லை!

"உங்களுக்குத் தெரியுமா, உங்களை அறியாமலேயே உங்கள் மனைவியை நீங்கள் பாலியலில் துன்புறுத்துகின்றீர்கள். உங்கள் மனைவியை நீங்களே கற்பழிக்கின்றீர்கள்...போன்ற சில அந்தரங்க உண்மைகளை இவர்களுக்குத் தெளிவுபடுத்தி, புரியவைத்து, உணரச் செய்த பின்னரே 'சமையல் அறை'க் கதவு திறந்தது. முஸ்லிம் குடும்பப் பெண்களைக் கண்டு, குடும்பத்திட்டத்தின் அவசியம் பற்றி ஏன் - எதற்காக - எப்படி என்பதையெல்லாம் அவர்களுக்குப் புரியவைத்தோம். நவீன தொடர்புச் சாதனங்களின் உதவியுடன், விளக்க உரைகளுடன் அவர்களுக்கு தெளிவுபடுத்தினோம்.

"இந்த நிகழ்ச்சியை நினைக்கும்போது, நாம் இன்று நடத்திக் கொண்டிருக்கும் கருத்தரங்கின் நோக்கை, பல வருடங்களுக்கு முன்னரே நாம் ஓரளவு செயல்பட முனைந்து விட்டோம் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்..." என்று கூறிமுடித்தார். திருமதி யோகா பாலச்சந்திரன்.

கருத்தரங்கில் தமது கருத்

வர்களின் நிலை? இவர்களுக்கு, தொலைக் காட்சி, வீடியோ தொலைக்காட்சி பூரண நன்மை அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம். திரையில் விழும் படங்கள், பட விளக்கங்கள் மூலமாக படிப்பறிவற்றவர்களுக்குக்கூட சிந்தனைத் தெளிவு ஏற்பட இடமுண்டு! செய்தித்துறைக்கான 'மூலவளங்கள்' எப்பிடம் நிறையவுண்டு. ஆனால் அவற்றை எப்பொழுதுமே கட்டிக் கொண்டிருக்காமல், அபிவிருத்திக்கு செய்தித்துறையைப் பயன்படுத்த அந்த மூலவளங்களைப் பரவலாக்க வேண்டும் பிற்பட்ட பகுதிகளுக்குச் சென்று, அவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு வீடியோ தொலைக் காட்சி போன்றவற்றை இயக்குவது குறித்து பழக்கி, அவர்களது பிரச்சினைகளை அவர்களே அணுகும் வகையில் அவர்களைக் கொண்டே வீடியோ தொலைக்காட்சி எடுத்து வெளியுலகுக்கு காண்பிக்க வேண்டும். இந்த முறை அபிவிருத்திக்கு செய்தித்துறை ஆற்றும் பெரும் பணியாகவே இருக்கமுடியும்" என்று தனது அபிப்பிராயத்தை கூறினார் நோர்வே நாட்டு ஒலிபரப்பு அதிகாரி அவர் கூறியதில் எவ்வளவோ உண்மை இருந்தது!

(நாளை தொடரும்)

## கருத்தரங்கில் குடும்பத் திட்ட(பிரசார)ம்

திற்கு அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்தது; பத்திரிகைகள் விளம்பரம் செய்ய மறுத்தன; பிரசாரத்துக்கு வானொலி தனது ஒத்துழைப்பை வழங்கவில்லை. இவ்விதமாக பொது மக்கள் தொடர்பு சாதனங்களாக விளங்கும் செய்தித்துறைகளே நமக்குசவாலாக நின்றால் நாம் என்ன செய்வோம். ஆனாலும் நாம் சளைக்கவில்லை. செயல் திட்டத்தில் நேரடியாக இறங்கினோம். மக்களிடம் சென்றோம் மக்கள் என்று நாம் கூறும்போது நகர மக்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. நீங்கள் இங்கு அடிக்கடி தெரிவிக்கும் "கிராஸ்றூட்ஸ்" எனப்படும் கீழ்மட்ட - கிராமிய சூழ் மக்களிடம் சென்றோம். மிகுந்த சிரமத்தின் மத்தியில் அவர்களுக்கு நிலைமைகளை விளக்கினோம்" என்று தெரிவித்த யோகா பாலச்சந்திரன்;

"உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி எனும் இடத்துக்குச்சென்றோம். அதுஒரு முஸ்லிம்பகுதி. எங்களது நோக்கம் பற்றி விரிவாக விளக்க முஸ்லிம் குடும்பப்பெண்களைநாடினோம். ஆனாலும் நாம் நினைத்தது போல் அவ்வளவு சுலபமாக எங்கள் சந்திப்பு இடம்பெறவில்லை. எமது நோக்கத்தை அவர்களிடம் கூறுவதற்கு முன்னர் குடும்பப் பெண்களைச் சந்திப்பதே பெரும்பாடாக இருந்தது! அந்தப் பெண்களின் கணவன்மார் 'நந்தி' மாதிரி நின்றுகொண்டு, அவர்களது மனைவிமாரை சந்திப்பதைத் தடுத்தனர்!

"உங்கள் யோசனைகளை என்னிடம் தெரிவியுங்கள். நான் துக்களைத் தெரிவிக்க இவருக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அத்தனை சந்தர்ப்பங்களையும் நன்றாகப் பயன்படுத்தி, அங்கு அமர்ந்திருந்தவர்கள் மத்தியில் அருமையாகப் பிரச்சாரம் செய்துவிட்டார்! இதனை ஆமோதிப்பதுபோல பிரபல பத்திரிகையாள' திரு. தாரிஸி வித்தாச்சியும் புன்னகையுடன் தலையசைத்ததை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சபாஷ் யோகா.

●

கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் நோர்வே ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தகவல் தொடர்பு பிரதம அதிகாரி திரு. றெயிடர் ஹாஸிபை தெரிவித்த ஒரு யோசனை; வரவேற்கக்கூடியதாக இருந்தது.

"தகவல் தொடர்பு சாதனங்களில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் முக்கியத்துவம் என்ன? எனது நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள், இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வேயில் தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்ட போது, பத்திரிகைகள் சஞ்சிகைகளின் எதிர்காலம் பற்றி அச்சம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் என்ன நடந்தது! பத்திரிகைகள், வார, மாத சஞ்சிகைகளின் விற்பனை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை! காரணம் என்ன? ஒரு வாசகர், நினைத்த உடன் தான்விரும்பும் பத்திரிகையையோ அல்லது சஞ்சிகையையோ எப்பொழுதும் மீண்டும் மீண்டும் படிக்க முடியும்! இந்த நிலை படிக்கவர்கள் மத்தியில் உண்டு. ஆனால் படி...

## வள்ளம் திருட்டு

[பலாலி]

மயிலிட்டியில் 39,500ரூபா பெறுமதியான வள்ளம் ஒன்றும், இரண்டு வெளி இணை இயந்திரங்களும் வலைகளும் களவாடப்பட்டுள்ளன.

மயிலிட்டியைச் சேர்ந்த திரு. வீ. உதயகுமாருக்குச் சொந்தமான இந்த வள்ளமும் வெளி இணை இயந்திரங்களும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தில் சென்ற மாதம் தவணை முறையில் கடனாகப் பெறப்பட்டவையாகும்.

ஞாயிறு இரவு மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட இவ்வள்ளமும் இயந்திரங்களும் அன்று இரவு 10மணியளவில் களவாடப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இத் திருட்டு இடம்பெற்றதை அடுத்து உடனடியாக அன்று கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை வீரர்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டும் பலன் கிடைக்கவில்லை. காங்கேசன்துறைப் பொலிசார் இதுகுறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

## ஆணழகன்

(புலோலி)

அண்மையில் தேசிய இளைஞர் சேவை மன்றம் நடாத்திய விளையாட்டுப் போட்டிகளில் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்ற யாழ். ஆணழகன் போட்டி மேடையிலே பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பொ. ஜெயபாலன் முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்டார்

## கூட்டுறவுச் சங்கம்

(புலோலி)

பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச்சங்க எல்லைக்குள் உள்ள மீனவர்களின் வலை, வள்ளம், கட்டுமரம், இயந்திரம் ஆகிய மீன்பிடி உபகரணங்களை காப்புறுதி செய்வதற்கு பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை காப்புறுதி ... மித்துள்ளது

"வெகுஜனப் போராட்டங்களில்

## தனிமனித தியாகங்கள் தவிர்க்கமுடியாது!"

### கம்யூ. கட்சி செயலாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கையை ஏற்று தேசம் முழுவதும் நடைபெற்ற தேசிய எதிர்ப்பு தினத்தில் தனது இன்னுயிரைப் பலி கொடுத்த தியாகி சோமபாலாவிற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக்குழு தனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு பொன். குமாரசாமி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் கூறியதாவது!

"வெகுஜனப் போராட்டங்களில் தனிமனித தியாகங்கள் தவிர்க்க முடியாதவை. இதற்கு உதாரணமாக விளங்கியவர்கள் அமரர்கள் கந்தசாமி, கோவிந்தன் போன்றவர்கள் இவர்களைப் போலவே தன் இன்னுயிரை ஈந்த தியாகியாகி சகல இனமக்களினதும் பெரும் மதிப்பிற்கும் அன்பிற்குமுரியவராகி விட்டார் அமரர் சோமபாலா

"இவரின் தியாகமும் தணிச்சலும் வீண்போகாது என்பதை இந்நாட்டு முற்போக்கு வாதிகளும் குறிப்பாக தொழிலாளிவர்க்கமும் உணர்ந்து எதிர்காலத்தில் செயல்படுவர் என்பது உறுதி"

## சாதிமுறைக்கு எதிரான கருத்தரங்கும் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

சாதி அமைப்புக்கு எதிரான அணுகு முறையும் பயிற்சியும் கருத்தரங்கும் இம்மாதம் 27ம் திகதி போயாதினத்தன்று யாழ்நகரில் நடைபெறவுள்ளது.

அமெரிக்க அறவழிவாழ்வு நிலையத்தைச் சேர்ந்த நான்கு அமெரிக்கர்களால் இக்கருத்தரங்கில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வடபகுதியில் இயங்குகின்ற 19 தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுகூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 100 ஊழியர்களுக்கு நடாத்தப்படும் இக் கருத்தரங்கில் ஒவ்வொரு சங்கங்களில் இருந்தும் ஐந்து ஊழியர் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு, பங்கு கொள்ளவுள்ளனர்.

அரசாங்கப் பாடசாலைகளில் இவ்வகை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமிய மண்டபத்தில் இக்கருத்தரங்குகளை நடாத்துவதற்கு அறவழிப்போராட்டக்குழு முன்வந்துள்ளது

இப்பயிற்சி முகாமினை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை சமாஜ செயலாளர் திரு க. நடராஜா செய்துள்ளார். [கொ-இ]

## கேதீச்சரத்தில் கூட்டுறவு ஊழியர்சங்க ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும்; வருடாந்தப் பொதுக் கூட்டமும், இம்மாதம் 14ம் திகதி திருக்கேதீஸ்வரம் மடத்தில் சங்கத் தலைவர் திரு. க. துரைசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம அதிதிகளாக மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. சி. நித்தியானந்தன் வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு இ. ஜெகநாதன் மன்னார் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. இ. செல்லத்துரை வவுனியா ஸ்ரீலங்கா தேசிய சபைச் செயலாளர் திரு. க. சிவசுப்பிரமணியம்: லங்கா தொழிற்சங்க சம்மேளன தொழிற்சங்க நடவடிக்கைக் குழு செயலாளர் திரு எஸ். விஜயானந்தன்: திரு. க. மகாதேவன் ஆகியோர் கலந்து சிறப்புரை ஆற்றுவார்.

பொதுக்கூட்டத்திலும் யாழ். மாவட்டத்தில் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள்: மன்னார், வவுனியா: முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்களுமாக 2500 பேர்வரை கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது, [செ]

## கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கூட்டுறவு தினவிழா வெள்ளிமுறை அடுத்த மாதம் 17ம் தேதி நடந்த யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஏற்பாடு செய்துவருவதாக, சங்க தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையில் பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகளும், பொது மக்களுக்கிடையில் 'கூட்டுறவால் வாழ்ந்திடுவோம்' என்ற தலைப்பில் 150 சொற்களுக்குள் அடங்கிய கவிதைப் போட்டியொன்றும் நடைபெறவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இப்போட்டியில் தெரிவு செய்யப்படுவோர்கள் அடுக்க மாதம் 26ம் தேதி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையினால் மாவட்ட ரீதியில் நடத்தப்படும் போட்டியில் கலந்து கொள்வார்கள். (க)

## அபராதம்

[புலோலி]

விற்பனைப் பொருட்களில் விற்பனை விலை குறிக்கப்பட வேண்டும் என்ற பாவனையாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய புடவைக்கடை உரிமையாளர் ஒருவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புடவைக் கடையொன்றின் உரிமையாளரே விற்பனைப் பொருட்களில் விற்பனை விலை குறிக்கப்பட வேண்டும் என்ற பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறியவராவர் இவருக்கெதிராக யாழ். விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே எஸ். மகேசன் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கிணங்க நீதவான் 100 ரூபா அபராதம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரஜாவுரிமை கோரிய அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கவேண்டும்

## தோட்டத் தொழிலாளருக்கு காணிவழங்குக

### தேசபக்த வாலிபர் இயக்க மாநாடு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

"பொது விடுமுறை நாட்களை சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாட்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதுடன், சம்பளத்துடன் கூடிய 14 நாட்கள் வைத்திய விடுமுறையும் வழங்கப்பட வேண்டும்."

தலவாக் கொல்லையில் நடைபெற்ற இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் மலையகப் பிரதேச முதலாவது மாநாட்டில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

திருவாளர்கள் பி. இராசேந்திரன், கே. எல். சில்வா, இ. தம்பையா ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழு தலைமையில் மேற்படி இயக்கத்தின் மாநாடு நடைபெற்றது.

### 200 இயக்கப் பிரதிநிதிகள்

இயக்கத்தின் பல பகுதியிலிருந்தும் இருநூற்றுக்கும் அதிகமான இயக்கப் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டனர். மறைந்த தியாகிகளுக்கு முதலில் அஞ்சலி செலுத்தப்பட்டது. முடிவில் நிகளை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது 15பேரைக் கொண்ட மலையகப் பிரதேசக் கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இ.து) சார்பில் தோழர் ந. சண்முகதாசன் சுப்பிரமணியம் மகாநாட்டில கருத்து தெரிவிக்கையில்: ", மலையக மக்களின் வாழ்வில் தொழிற்சங்கங்கள் ஆற்றிய ஆற்றி வரும் சேவை பாராட்டத்தக்கது. ஆயினும், அரசியல் ரீதியில் மலையமக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் பணியில் ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தி இருப்பதன் மூலம் இம் மாநாடு மலையக வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்திருக்கிறது இம்மாநாட்டில் காட்டும் உற்சாகத்தையும், விவாதத்தில் வெளிப்படுத்திய கருத்துக்களின் ஆழத்தையும் பார்க்கும்போது எதிர்காலம் ஒளிமயமானதென உணரமுடிகிறது" என்று குறிப்பிட்டார்.

#### தீர்மானங்கள்

இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

இலங்கை பிரஜாவுரிமை கோரி மனு செய்துள்ள அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது இலங்கைப் பெண்களை மணமுடித்துள்ள ஆண்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சனை முற்றாக தீர்த்து வைக்கப்படும் வரை, பாதிப்புக்குள்ளாகியுள்ள இம்மக்கள், இந்நாட்டிலுள்ள ஏனைய மக்களைப்போல் சம உரிமைகளை அனுபவிக்க வேண்டும்.

#### மாதாந்த சம்பளம்

மாதச் சம்பளம் தற்போதைய ஆண் தொழிலாளியின் குறைந்தபட்ச நாட்சம்பளம், 30ஆல் பெருக்கப்படுவதுடன் கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவின் ஒவ்வொரு புள்ளி அதிகரிப்புக்கும் மூன்று ரூபாய் சேர்த்து வழங்கப்பட வேண்டும். இத்துடன் விலைவாசி உதவிப்படி 30ஆல் பெருக்கப்பட்டு சம்பளத்துடன் சேர்க்கப்படவேண்டும் இதில் தேயிலை - றப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கிடையே பாரபட்சம் காட்டப்படலாகாது. தொழிலாளர்கட்குப் பாதகமானமுறையில் வேலைப்படிவங்களில் மாற்றம் இருக்கக்கூடாது, ஆண், பெண் தோட்டத் தொழிலாளர் அனைவருக்கும் சமசம்பளம் வழங்கப்பட வேண்டும்.

#### வசிப்பிட நிலைமைகள்

தற்போது தொழிலாளர் வசிப்பிடங்களாக இருக்கும் பகுதிகளில் கிராமங்களை உருவாக்கவேண்டும். தொழிலாளருக்கு வீட்டுவசதி, சௌகரிய உதவிகள் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வாசிகசாலைகள், பாடசாலைகள், கலைவநிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் கூட்டுறவு பண்டகசாலைகள் போன்ற வசதிகளுடன் சமுதாய வாழ்வின் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும்வகையில் இக்கிராமங்கள் அமைய வேண்டும்.

#### கல்வி வசதிகள்

14 வயதுக்கு குறைந்த பிள்ளைகளை எந்தவகையிலும் வேலைக்கமர்த்துவதை தடைசெய்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் சகல தோட்டப்பாடசாலைகளும் தேசிய கல்விஅமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு நாட்டின் ஏனைய கல்விநிலையங்களின் தரத்துக்கு தரமுயர்த்தப்பட வேண்டும். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதுடன் கல்வித்திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும் ஆசிரியர் நியமனத்தில் தகுதிபெற்ற தோட்டப்பகுதியினருக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

#### காணிப் பங்கீடு

காணி இல்லாத சிங்களவர்களுக்குக் காணி வழங்கும் அதேவேளை அப்பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் தோட்டத்தொழிலாளர்களுக்கும் பாகுபாடின்றி காணிப்பங்கீடு செய்யப்பட வேண்டும், தோட்டங்களில் இருந்து தொழிலாளர்களை, துரத்தியடிக்கும் இதயமற்ற செய்கையை நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம். வீட்டுத்தோட்டம் போடவும் பயிர்ச்செய்கை செய்வதற்கும் தோட்டத்தொழிலாளருக்குநிலம்வழங்கப்பட வேண்டும். (கொ)

---

# "மனிதாபிமானிகள் இனம் காணப்படுவர்!"

## வெகுஜன இயக்க 14 வது கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"வெகுஜன இயக்கத்தின் பொதுக் கொள்கை காரணமாக அது தனக்கு நண்பர்களை அதிகரித்துள்ளது அதே வேளையில், சாதி முறையைக் காப்பாற்றுவதற்காக நிற்பவர்களும் பகிரங்கப்படுத்தப்படுகின்றனர். இது எதிரிகளின் நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு செயல்படும் வாய்ப்பை எமக்களித்துள்ளது எனவேதான் நல்லெண்ணம்கொண்ட சகலரையும் இணைத்துக்கொண்டு, வடமராட்சிப் பிரதேசத்திற்கான மாநாட்டை வெற்றிபெறச் செய்யவும், அதனடிப்படையில் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தவும் நாம் எமது சக்திகளை ஒருமுகப்படுத்த வேண்டும்."

அல்வாய் குச்சம் மைதானத்தில் நடந்த வெகுஜன இயக்கத் தொடரின் 14வது கருத்தரங்கில் தலைமைதாங்கிப் பேசியபோது வெகுஜன இயக்க உப தலைவர்களில் ஒருவரான திரு. சி. கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் "இம்மாதம் 28ல் வடமராட்சியில் நடக்கப் போகும் மாநாட்டைபடுத்து ஆலயப் பிரவேசங்களுக்கான நடைமுறைகள் கையாளப்படும். மனிதாபிமானமுள்ள சகலரும் எமக்கு ஒத்தாசை தருவர் அப்போதுதான் மனிதாபிமானிகளை இனம் கண்டு கொள்வோம்" என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் அமைப்பாளர் கே. டானியல், தலைவர் கே. கிருஷ்ணபிள்ளை, ஆசிரியர் சுகுணு உட்படப் பலர் கருத்துத் தெரிவித்தனர். மாநாட்டு வேலைகளுக்கான உப சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

வராத்துப்பளை கொலைவழக்கு:

# மூன்று எதிரிகளும் பிணையில் அனுமதி

(புலோலி)

வராத்துப்பளை, சிவக்கொழுந்து தொழிலாளி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று எதிரிகளும் தலா 2, 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

புலோலி தெற்கு பசலைப் பகுதியைச் சேர்ந்த நாகன் வல்லிபுரம் என்ற சிவக் தொழிலாளியை வராத்துப்பளை வீதியில் வைத்து வெட்டிக்கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த மா. தெய்வேந்திரம், மு. கந்தையா, அச்சுவேலியைச் சேர்ந்த சி. குலசேகரம் ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டி பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

எதிரிகள் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது யாழ் மேல் நீதிமன்றம் அனுமதித்த தலா 2, 500 ரூபா பிணை உத்தரவை நீதவான் வழங்கினார்.

எதிரிகள் மூவரும் ஒவ்வொரு நாளும் தங்கள் பகுதி கிராமசேவை அலுவலர் அலுவலகத்திற்குச் சென்று கையெழுத்திட வேண்டும் என்றும் இது குறித்து மேல் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்காக அறிவிக்கப்படுமென்றும் எச்சரித்த நீதவான் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 11ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

ஏழாலை கொலை வழக்கு:

# பொலிசாரின் பதிவேடுகளை சமர்ப்பிக்க நீதவான்கட்டளை

(காங்கேசன்துறை)

ஏழாலை கொலைச்சம்பவம் தொடர்பான பொலிசாரின் பதிவேடுகளை இம்மாதம் 30ம் திகதி தம்முன்னிலையில் சமர்ப்பிக்குமாறு மல்லாகம் நீதிபதி சுன்னாகம் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

ஏழாலையைச் சேர்ந்த சி. தயாகுணம் என்பவரை அடித்துக் கொலைசெய்ததாக அவ்விடத்தைச் சேர்ந்த வி. தம்பிராசா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிபதி இந்த உத்தரவை விடுத்தார்

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு சி. ஆர். இராசசிங்கம் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. செல்லையாதேவராசா என்பவர் சாட்சியமளித்தார்.

எதிரி இறந்தவரது மனைவிக்கு அடித்தது தொடர்பாக எதிரியிடம் கேட்பதற்காக இறந்தவரும் தானும் எதிரி வசித்துவந்த அவரது மாமனார் இராசையா வீட்டுக்கு போனதாகவும் அப்போது எதிரியின் மாமி சின்னம்மா இறந்தவருக்கு மிளகாய்த் தூளைக் கரைத்து வீச எதிரி இறந்தவருக்கு பொல்லால் அடித்தாகவும் பின்னர் அங்கு நின்ற வீரய்க்கொடி என்பவர் இறந்தவருக்கு இரும்புக்கம்பியால் அடித்ததாகவுல் அவர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தமது இரு வாக்குமூலங்களை சுன்னாகம் பொலிசார் பதிந்ததாகவும். ஒன்று தாமாகவே சொல்லிப் பதிந்ததாகவும், இன்னொன்று கண்டேத் தாக்கிய பின்னர் அவர்கள் ஏதோ எழுதிவிட்டுக் கையொப்பம் வாங்கியதாகவும் சாட்சி தெரிவித்தார்.

இச்சமயத்தில் வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக பதிந்த பதிவேடுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் அது பற்றி ஆராய்ந்து உண்மையை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் மேற்படி சம்பவம் தொடர்பாகப் பொலிசார் பதிவு செய்த பதிவேடுகளை இம்மாதம் 30 ம் திகதி தம்முன்னிலையில் சமர்ப்பிக்கவேண்டுமென உத்தரவிட்டு விசாரணையை அத்திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிதரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், மு. திருநாவுக்கரசு ஆகியோரும் வழக்காளிதரப்பில் சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜரானினர். (ஈ)

---

மண்டைதீவு

# கொலைமுயற்சி வழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கொலைமுயற்சி வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகரரசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது விசாரணை தொடர்ந்து மூன்றாவது நாளாக நடைபெறும்

1979ம் ஆண்டு ஜூலை மாதம் 5ந் திகதி மண்டைதீவைச் சேர்ந்த எஸ். புஷ்பநாதன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த பாலகிட்டிணன், வரதராசா, இராசலிங்கம் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முதல்முறையாக யாழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு நீதியமன்றத்தில் சாட்சியின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுக் குறுக்குவிசாரணையின் பின் விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டின்போது கண்டெடுக்கப்பட்ட தடயப் பொருட்களை யாழ். பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். குணரத்தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் எஸ் இரத்தினம் பலத்திற்கு ஆதரவாகச் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜரானார். எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். சிவநாதன், எஸ். அமிர்தலிங்கம், ஆர். ஜெகசீலன் ஆகியோர் ஆஜராகினர். (கொ)

---

# கோவில்மடத்தில் சூதாடினரம்

(புலோலி)

கோவில் மடத்திலிருந்து சூதாடிய நான்கு இளைஞர்களுக்கு தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோவில் மடத்திலிருந்து சூதாடிய நான்கு இளைஞர்களைப் பருத்தித்துறைப் பொலிசார் கைது செய்து பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இளைஞர்கள் நால்வரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கிணங்க நீதவான் தலா 25 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

---

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(புலோலி)

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகராலயத்திற்கு, ஈழநாட்டின் தலை சிறந்த சிற்பிகளால் மூலபத்திர வேலைப்பாடுகளுடன், புதிய பாணியில் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இம்மாதம் 23ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுரா வன்செயல்கள்: 300 பேர் பலி!

## 1000 பேர் வீடிழந்தனர்!

அகர்த்தலா, ஜூன் 11

திரிபுராவில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களினால் 300 பேர் பலியானார்கள் என்றும் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை நேரில் ஆராய திரிபுரச் சம்பவங்கள் பற்றி அவர் வர்ணிக்கையில், அமைச்சர் திரு. ஸ்கிம்... மிகவும் பயங்கரமானது; அகர்த்தலாவுக்கு வந்துள்ளார் ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடியது" என்று தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக 600 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று திரிபுரா முதலமைச்சர் தெரிவித்தார்.

வன்செயல்களுக்கு வெளியார் சக்திகள் பின்னணியில் இருந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## பீஹாரில் உருது

### 2-வது அரச மொழியானது

பாட்னா, ஜூன் 11

பீஹாரில் உருதுமொழி, இரண்டாவது அரசகரும மொழியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுபற்றி பீஹார் முதல் மந்திரி நேற்று கருத்துவெளியிடுகையில், பீஹாரில் பத்து வீதமான மக்கள் உருதுமொழி பேசுபவர்கள் என்றும் அவர்களின் நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதுசம்பந்தமான திருத்தம் அரசியலமைப்பில் இடம் பெறும் என்றும் அவர் கூறினார்.

### ஆப்கான் பிரச்னை:

## வெளியார் தலையீடு நிறுத்தப்பட்டால் சோவியத் படைகள் வாபஸாகும்

### பிரதமர் இந்திரா கருத்து

பொன், ஜூன் 11

"ஆப்கானிஸ்தானை ஒரு நடுநிலை நாடாக்குவது பற்றிய ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டமைச்சர்களின் ஆலோசனை, யதார்த்தமற்றது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

திருமதி இந்திரா காந்தி ... அளித்த பேட்டியின் மேலும் கூறியதாவது:

"சோவியத்யூனியன் விரும்புவது ஒரு நடுநிலையான ஆப்கானிஸ்தானை அல்ல, அது ஒரு நேச அரசாங்கமுள்ள அயோக்கியமான ஆப்கானிஸ்தானை விரும்புகிறது எனக்கு கிடைத்துள்ள தகவலின்படி பாகிஸ்தானிலிருந்தும் ஈரானிலிருந்தும் கூலிப்படைகள் ரகசியமான அனுப்பப்படுகின்றன. இந்த வெளியாரின் தலையீடு நிறுத்தப்படும் பட்சத்தில் தான் சோவியத்படைகள் வாபஸாகும். இதைக் கூறுவதால், நான் சோவியத் ஊடுருவலை ஆப்கானிஸ்தானில் நியாயப்படுத்துவதாக இல்லை. ஆப்கான் நிலவரத்தை எதார்த்தக் கண்கொண்டு பார்க்க வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு செயல்பட்டால் உருப்படியாக ஒன்றையும் செய்ய முடியாது. வியட்னாமை சீனா தாக்கியபோது ஏன் மௌனம்சாதித்தார்கள் என்று திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

## உலகவங்கித்தலைவர் 81-ல்

### ராஜினாமாச் செய்வாராம்

வாஷிங்டன் ஜூன் 11

உலக வங்கித் தலைவரான திரு. ரொபேட் மக்னமாரா அடுத்தாண்டு தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 30ந் திகதி தாம் பதவியிலிருந்து ராஜினாமா செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய தலைவராக முதல் தடவையாக அமெரிக்கர் அல்லாத ஒருவர் நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பதவியிலிருந்த ஐவரும் அமெரிக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

64 வயதான திரு. மக்னமாரா 68ம் ஆண்டு உலக வங்கி தலைவராக நியமனம் பெற்றார். வியட்னாம் யுத்தம் உச்சக் கட்ட நிலையில் இருந்த போது திரு. மக்னமாரா அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

[இ]

## இந்துநிறுவன ஊழியருக்கு சேமநலத் திட்டம்!

### தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, ஜூன் 11

இந்துசமய நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் குடும்பச்சேமநல நிதித் திட்டமொன்றை தமிழக அரசு நேற்று அறிமுகப்படுத்தியுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்து சமய நிறுவனங்களைச் சேர்ந்த அனைவரும் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத்தில் 25 முதல் 50 வரை வயதுள்ள அனைவரும் சேர்ந்துகொள்ளலாம் என்றும், மாதம் ரூபா 2-50 முதல் ரூபா 7-50 வரை இவர்கள் செலுத்தவேண்டும் என்றும் அங்கத்தவர்கள் இறக்கும்பட்சத்தில் அவர்கள் குடும்பத்துக்கு ரூபா 2,000 முதல் ரூபா 5,000 வரை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### அச்சுவேலி கொலைவழக்கு:

## விசாரணை நடுவில் 4 எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி பத்தமேனி கொலை வழக்கு விசாரணை நடுவில் நான்கு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டு மேல் விசாரணை இம் மாதம் 17ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த சுப்பையாதுரைராஜா என்பவரைக் கொலைசெய்ததாக அதேஇடத்தைச் சேர்ந்த குடியன் இராஜதுரை, ஜோசப்நடராசா, இராசதுரை இரத்தினம், முத்தன் கார்த்திகேசு இவலை துரைச்சாமி, முத்தன் விமல், சினியன் சின்னத்தம்பி சின்னட்டி சினியன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஏற்கனவே பல சாட்சிகள் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து கணபதி விஜயரத்தினம் இக் கொலை பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கடந்த தவணையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கையை எதிரிகள் தரப்பு சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரட்னம் விடுத்ததால் அதுபற்றிய முடிவை நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் நேற்று ஒத்திவைத்திருந்தார்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 3ம், 4ம், 7ம், 8ம் எதிரிகளை நீதிபதி விடுதலை செய்து ஏனைய நால்வர் மீதான விசாரணையை இம்மாதம் 17ம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் இக்கொலைபற்றிய விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் திரு. ஆரியசேன, திரு இயான் ஆகியோரையும் சார்ஜன்ட் சபாரத்தினத்தையும் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டுமென்று கட்டளை அனுப்புமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி கமலா தில்லையர், செல்வி மோகாந்தி செல

[2-ம் பக்கம் பார்க்க]

## ஈரானுக்குள் இஸ்ரேல் ஊடுருவல் நடத்துமா?

டெல் அவிவ் ஜூன் 11

"இஸ்ரேலிய இராணுவத்தில் ஆயுதாரிகளைக் கொண்ட விசேஷ பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்குள் ராணுவ ஊடுருவல்களைச் செய்வதற்காக திட்டங்களை இப்பிரிவு வகுத்துக் கொண்டிருக்கிறது. அதே வேளையில் ... மொழி பேசும் சிறந்தவர் சக்திகளை இஸ்ரேலிய ராணுவத்தின் உளவு சேவை ஈரானுக்குள் அனுப்பத் தொடங்கிவிட்டது" என்று எபின் நிருபர் செய்தி வெளியிட்டுள்ளார்.

"வாஷிங்டனது ஈரானிய விரோத நடவடிக்கைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்... அவ் தயாராக உள்ளது தளங்களையும் துருப்புக்களையும் அளித்துக் கூட இந்த உதவியினில் அடங்கும் என்று இஸ்ரேலியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

அமெரிக்கர்கள் இதிலிருந்து நீண்டகாலம் தயங்கிநிற்கத் தேவையில்லை என்றும் இஸ்ரேலிய ராணுவ நாலே 60 ஆயிரம் யூதர்களை எமது நிர்வாக பொலிஸ் காவலர்களாக ஈரானில் பயன்படுத்த முடியும்" என்றும் இஸ்ரேலின் பிரதான யூத குரு அறிவித்துள்ளார். இவர் மூன்றுள் ராணுவ அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது". என்றும் இந்த நிருபர் எழுதுகிறார்

ஆண்டுதோறும் இஸ்ரேல் இரண்டு முதல் இரண்டரைக் கோடி "ரியால்"கள் வரை ஈரானிய பொருளாதாரத்தில் முதலீடு செய்து, 30 சத வீதமான லாபத்தைப் பெற்றது. ஈரானிய நிறுவனங்களது போர்வையில் ஏராளமான இஸ்ரேலிய கம்பனிகள் ஈரானில் இயங்கின. இவற்றுக்கூடாகவே அமெரிக்கர்களது மூலதனங்கள் ஈரானுக்குள் ஊடுருவின. ஈரான், "இஸ்ரேலின் எண்ணெய் இருதயம்" மேற்குலகப் பத்திரிகைகள் கூறியது என்றும் எழுதும் இந்த நிருபர், தாமடைந்த லாபங்களுக்கு உதவும்வகையில் ஷாவின் ஆட்சியை நிலைநிறுத்திவைத்த இஸ்ரேலிய உளவு சேவை ஈரானின் ரகசியப் பொலிஸ் குழுவினருடன் சேர்ந்து உழைத்தது. ஷாவினுடைய பொலிஸுக்குத் தேவையான வீன ஆயுதங்களை வழங்கியது. சித்திரவதை முகாம்களுக்குத் தேவையான கருவிகளை வழங்கின" என்று கூறுகிறார்.

## திருட்டு வழக்கில்

### ஊமைப்பெண் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

திருட்டு வழக்கொன்றில் ஊமைப்பெண் ஒருவர் சாட்சியம் அளிக்க இருப்பதால், ஊமைப் பாஷையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் மூலம் அப்பெண்ணின் சாட்சியத்தை பெறுவதற்காக மேற்படி வழக்கு இம்மாதம் 13ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. யோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

அரியாலையில் உள்ள தனது வீட்டில் கட்டிலின் கீழ் உள்ள தகர டப்பா ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த 3,500 ரூபா பெறுமதி வாய்ந்த தங்கச் சங்கிலி ஒன்றையும் ஒரு சோடி காப்பையும் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சரஸ்வதி என்பவர் அபகரித்துச் சென்றதாக திருமதி எஸ். ஞானம்பிகை யாழ் பொலிஸில் செய்த புகாரைத் தொடர்ந்து யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எஸ். திருச்சிற்றம்பலம், கான்ஸ்டபிள் எஸ். குணரத்தினம் ஆகியோரால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

திருட்டுச் சம்பவத்தை நேரில் கண்ட எஸ். கலைச்செல்வி என்ற ஊமைப்பெண் ஒருவரின் சாட்சியத்தை ஊமைப்பாஷையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர்மூலம் நீதிமன்றத்தில் பதிவுசெய்வதற்காக இவ்வழக்கு இம்மாதம் 13ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (கெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை, சுத்தம்.
சுகாதாரம் நிறைந்த
உல்லாசப் பயணிகளுக்கேற்ற
சைவ ஓட்டல்
சகலவிதமான வெளிநாட்டு
பிஸ்கட்டு வகைகள்,
குளிர்பானங்கள்,
சாப்புச்சாமான்கள்
அனைத்திற்கும்
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
போன்: 8095

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## அ.தி.மு.க. தொண்டர் பலி!

(சென்னை)

அ. தி. மு. க. தொண்டர்கள் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று திண்டுவனத்தில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் 20 பேர் பலத்த காயமடைந்தனர்.

சென்னையில் நடைபெற்ற அ. தி. மு. க. வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருக்கையிலேயே இவ்விபத்து நடைபெற்றது. (கு)

தேமஸ் பிளாஸ்கள்
ஒலிப்பதிவு நாடாக்கள்
கமராக்கள், பிளாஷ்கள்
அலங்காரப் பொருட்களுக்கும்
சிறந்த
போட்டோஸ்ரட்
பிரதிகளுக்கும்
பாரத் சென்ரர்
178, நவீனசந்தை,
(புதிய கட்டிடம் உள்பகுதி)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

## மத்திய கல்லூரி விவகாரம்:

# "போராட்டம் மூலம் தீர்வுகாண முடியாது"

### யாழ். டி. ஐ. ஜி. மகேந்திரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"யாழ் மத்திய கல்லூரி அதிபர் தவறு செய்திருந்தால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்கள் கல்வித்திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதை விடுத்து பாடசாலைக்கு வெளியே நின்று போராட்டம் நடத்துவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது"

வட பிராந்திய பிரதிப் பொலிஸமா அதிபர் திரு. பி. மகேந்திரன் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பி.ஐ.ஜி பொலிஸ்மா அதிபர் மேலும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"வடபகுதித் தமிழ் மாணவர்கள் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்துபவர்கள் என்றும் யாழ்ப்பாணத்திலேயே திறமையான மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் கல்லூரிகளும் உண்டென்றும் நாட்டில் பரவலாக கருதப்படும் இவ்வேளையில் மத்திய கல்லூரி மாணவர்களின் இச்செயல் யாழ்ப்பாணத்தின் நல்ல பெயருக்குக் களங்கம் விளைவிக்கப்போகின்றது. இச்செயல் மிகவும் வேதனைதரக்கூடிய ஒரு செயலாகும்.

"அதிபர்களில் மிகவும் உயர்ந்தநிலையில் உள்ளவர் யாழ் மத்திய கல்லூரி அதிபர் அப்படிப்பட்ட ஒருவர் மீது குறை ஏற்பட்டுள்ளதென்றால் அதற்குமுக்கிய காரணம் ஒன்று இருக்கத்தான்வேண்டும். அந்தக்காரணத்தைக் கண்டுபிடித்து தக்கபரிகாரம் தேடவேண்டியது கல்வி இலாகாவின் பொறுப்பு கல்வி இலாகாவின் அதிகாரத்தில் மாணவர்கள் தலையிடுவது தவறு.

இதுபோன்ற பகிஷ்கரிப்பினால் நாட்டில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இந்தநாட்டில் அமைதியை நிலைநாட்டவேண்டிய பொறுப்புப் பொலிசாரிடம் உள்ளதால் மாணவர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டு தமக்கும் தமது சமூகத்திற்கும் துன்பத்தை உண்டாக்குவதை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது.

மத்திய கல்லூரி மாணவர்கள் இன்றையநிலையை உணர்ந்து பகிஷ்கரிப்பைக் கைவிட்டு ஒழுங்கான முறையில் பாடசாலைக்குச் சென்று படிப்பில் அக்கறை செலுத்தி நாட்டிற்கும் தமக்கும் நல்லபெயரைச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும்" (கொ-கு)

## பதில் விவசாய அமைச்சர் இன்று வடபகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

விவசாய விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை பதில் அமைச்சர் கே. டி. என். சந்திரா பண்டார மூன்றுநாள் உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்டு இன்று யாழ். வருகின்றார்.

இன்று காலை 10 மணிக்கு காங்கேசன்துறையைவந்தடையும் அமைச்சர் நாகவிகாரை - நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றுக்குச் சென்று வழிபாடு செய்வதுடன் தமது யாழ் விஜயத்தையும் ஆரம்பிப்பார்.

இன்று திருநெல்வேலி விவசாயபாடசாலை, திருநெல்வேலி ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவற்றைப் பார்வையிடும் அமைச்சர் மாலை 4 மணிக்கு இணுவில் நாற்றுமேடைகளை பார்வையிட்டபின் மருதனார்மடம் விவசாயிகளை சந்தித்துகலந்துரையாடுவார்.

இன்று இரவு நல்லூர்க் கமநல சேவை நிலையத்தில் யாழ். கமநல சேவைகள் உதவிஆணையாளர் திரு. க. பரமலிங்கம் தலைமையில் பதில் அமைச்சரை கௌரவிக்கும்முகமாக நல்லூர் கமநல சேவை நிலையத்தினரால் இராப்போசன விருந்து அளிக்கப்படவுள்ளது.

நாளைக் காலை யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெறும் விவசாயக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டபின் அமைச்சர் கோண்டாவில் ராஜவீதி, உரும்பராய் ஆகியவற்றுக்குச்சென்று முந்திரிகை பண்ணைகளையும், தோட்டங்களையும் சுற்றிப்பார்வையிடுவார். சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு பகுதிகளின் மரக்கறி பயிர்ச்செய்கையும் பார்வையிடவுள்ளார்.

... சங்க ... நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் விவசாய சங்கங்களையும் ... முகவர் நிருவனங்களையும் சந்திப்பார். (கி)

### கே. வை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைநகரில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு இவ்வாறு தீர்மானித்துள்ளது.

கட்சியிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த மற்றோர் உறுப்பினரான திரு. ஈழவேந்தன் விவகாரத்தை கூட்டணியின்பொதுச்சபைக்கு விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஈழவேந்தன் கூட்டணியின் சாதாரண உறுப்பினராகவின்றி வேறு ... களிலும் உறுப்புரிமை உடையவராக இருப்பதாலேயே அவரின் விவகாரத்தை பொதுச் சபைக்கு விடுவதாக நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. அமிர்தலிங்கம் நேற்றுக்காலை இந்தியாவிலிருந்து திரும்பியதும் பிற்பகல் செயற்குழு தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் கூடியது. (ம)

## தமிழகப் பேராசிரியரின் சிறப்புரை



(யாழ்ப்பாணம்)

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி வித்வான் வை. இரத்தினசபாபதி இன்று மாலை வண்ணார்பண்ணை நீராவியடி கோட்டுப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் "நாவலர் பெருமான்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவமகாநாட்டில் கலந்து கொள்ள பேராசிரியர் இரத்தினசபாபதி இங்கு வந்திருந்தார்.

நாவலர் பெருமான் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கும் பேராசிரியரின் இன்றைய சிறப்பு நிகழ்ச்சிக்கு திரு க. சோமசுந்தரம் தலைமை வகிப்பார். (கு)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் இராசையா

(சக்கடத்தார்)

வண்ணார்பண்ணை வடமேற்கைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்றச் செயலாளரு(சக்கடத்தார்)மான திரு. மயில்வாகனம் இராசையா காலமானார். இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிஐயா, (இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர்) வின் சகோதரரும், புஷ்பராசா (பெரும்பாக உத்தியோகத்தர், கமநல சேவை அலுவலகம், யாழ்ப்பாணம், முன்னாள் கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளர்), பத்மராஜா (மாவட்டப் பொறுப்பதிகாரி, வனபரிபாலன இலாகா, மட்டக்களப்பு), போகராஜா (சட்டத்தரணி, நிர்வாக அதிபர், ஜெனரல் இன்டஸ்ரீஸ் லிமிட், நெப்போ கிளாஸ் உற்பத்தியாளர், முருகன் இன்டஸ்றீஸ் லிமிட், கொழும்பு, யாழ்ப்பாணம்), புஷ்பராணி (நைஜீரியா), பத்மராணி, டாக்டர் மகாராஜா (பி. எச். டி, லண்டன்), நடராஜா (அக்கவுண்டன்ட் லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், ரி. சொக்கலிங்கம் (அதிபர், விக்ரறி ஹைஸ்கூல், நைஜீரியா), டாக்டர் க. ஆறுமுகதாஸ், (வைத்திய அதிகாரி, கிராமிய வைத்தியசாலை, ரம்பாவெவ), ஜானகி, சிவயோகமணி, இந்திராணி, சீதாதேவி, சந்திரமணி ஆகியோரின் மாமனுருமாவார். அன்னாரது பூதவுடல் வண்ணார்பண்ணை வடமேற்கு, பொன்னையா ஒழுங்கை, இராஜகிரியிலிருந்து இன்று 12-ந் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு குடும்ப மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

5994

### கொள்ளைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ரிவால்வரையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொள்ளை நடந்த சமயம் கொள்ளையருடன் நடந்த இழுபறியின் போது ஒரு ரிவால்வர் கைப்பற்றப் பட்டது தெரிந்ததே. அச்சமயம் கொள்ளையர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்பட்டதாகக் கருதப்படும் ரிவால்வரை இப்பொழுது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சரத் சந்திரா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் ஒரு சந்தேக நபரைக் கைது செய்தனர்.

### பயிற்சி

அரிய சந்தர்ப்பம்! அடுத்து வரும் சேரலாம் சனி, ஞாயிறு வகுப்புக்கள், ஏயர் கொண்டிசனிங் (Air Conditioning and Refrigeration) மூன்று மாத டிப்பிளோமா வகுப்புக்கள் 14-6-80 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். முன் அனுபவம் சிறிதும் தேவை இல்லை. நாவலர் கட்டிடம் 11, மொம் சாக் கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

6001

### நிர்வாக ..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்கூட்டரில் வந்த சமயம் விகிதரும் ஸ்கூட்டரில் வந்ததாகவும், அந்த நேரத்திலேயே பகிரங்கமாக வீதியில் இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிர்வாக அதிகாரியை நேற்று கல்வி அதிபரும் திணைக்கள ஊழியர்களும் நெருங்கிதொகையான ஆசிரியர்களும் சென்று பார்வையிட்டனர்.

லிகிதர் கருணாநிதியும் காயத்துடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-கு)

### அமைச்சர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக வரும் அமைச்சர் இன்று காலை விசேட ஹெலிகொப்டர் மூலம் யாழ் வந்து சேருவார்.

அமைச்சருடன் உயர் அதிகாரிகள் பலரும் வருகின்றனர். (கு)

இப்பத்திரிகை ... யாழ்ப்பாணம் ... வீதி 63-ம் இலக்கத்தில் ... 12-ம் திகதி ... வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/78. The Eelanaadu, ... Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org